முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**RLTOP No.1/2023**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 13.07.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 13.07.2026 | சாட்சி | ம.சா.1 |
| பெயர். | மஞ்சுளா | வயது.. | 52 |
| கணவர் பெயர். | ராஜேந்திரன் | கிராமம்.. | திருவக்குளம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

5. எதிர்மனுதாரர் கடையை வாடகைக்கு விடுவதற்கு முன்பு ஹோட்டலாக இருந்தது என்றாலும் improvement வேலைகளான டைல்ஸ் போடுவது உள்ளிட்ட வேலைகள் செய்யும் போது என்னுடைய கணவர் உடன் இருந்தார் என்றால் சரியல்ல. பியூட்டி பார்லர் commercial ஆனது என்பதற்காக EB connection மாறும் என்றால் parlour -க்காக EB connection முறையாக பெறப்பட்டது. எதிர்மனுதாரர்கள் ரூ.75,000/-அதற்காக கட்டினார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் எவ்வளவு deposit கட்டினார்கள் என்றால் ரூ.25,000/- இருக்கும். எதிர்மனுதாரர் ரூ.75,000/- கட்டியதற்கு ரசீது வைத்திருக்கிறார்என்றால் சரியல்ல. என்னிடம் EB connection-ற்கான deposit ரசீது இருக்கிறது என்றால் சரியல்ல. ஏற்கனவே single phase என்றால் சரியல்ல, ஏற்கனவே கடைக்கான EB phase தான் இருந்தது.

6. எதிர்மனுதாரர் beauty parlour வந்தபிறகு தான் III phase ஆக மாற்றினார்கள் என்றால் சரியல்ல. நான் மேற்சொன்ன சங்கதிகள் மனுவிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முன்பே III phase தான் இருந்தது என்பதற்கான ஆதாரம் என்னிடம் உள்ளது என்றால் உள்ளது, அதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். சிவன் அருள் complex க்கு நான் தான் உரிமயாளர் என்றால் அதில் தான் எதிர்மனுதாரரின் beauty

parlour உள்ளிட்ட கடைகள் உள்ளது என்றால் சரிதான். சிவனருள் complex இல் மேல் தளத்தில் 8 Rooms உள்ளது, கீழ்தளத்தில், 4 கடைகள் உள்ளது. எல்லா கடைகளும் இயங்கிக்கொண்டு தான் இருக்கிறது. அனைத்திற்கும் தண்ணீர் வசதி இருக்கிறதா என்றால் Room க்கு இருக்கிறது, எதிர்மனுதாரர் கடைக்கு தண்ணீர் வசதி இல்லை. எதிர்மனுதாரர் கடைக்கு water connection இருக்கிறது என்றால் சரியல்ல. water connection -ற்காக Electric motor உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் meter இல் electric motor உடைய connection யை சேர்த்து எதிர்மனுதாரருக்கு தெரியாமல் அவருடைய மின்சார கட்டணத்தை அதிகரித்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. எதிர்மனுதாரின் parlour க்கு பெண்கள் தான் வருவார்கள் என்றால் சரிதான், எதிர்மனுதாரர் பெண்களுக்கு பார்லருக்கான பைலகமும் நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கடையை நடத்திக்கொண்டிருக்கும் போது நானும் என் கணவரும் சென்று கடையை மிரட்டி பூட்டி விட்டோம் என்றால் சரியல்ல, அதற்கு அண்ணாமலை காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நானும், எனது உறவினர்களும் தவறான பிரச்சாரத்தை கடைக்கு வரும் பெண்களிடம் செய்வதால் எதிர்மனுதாரின் வருமானம் கெட்டுவிட்டது என்றால் சரியல்ல. கடையை மூடும் அளவிற்கு நான் அவர்களது வருமானத்தை கெடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. beauty parlour வேலையை தவிர வேறு விஷயங்கள் நடப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.